

# Lifeline
# மீண்டும் வாழ்வோம்
இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 25 Pages 4 Sunday, 10 August 2008 Free Copy


## மண்வாசனையும் மனவேதனையும்

திருகோணமலை மாவட்ட சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் மட்டக்களப்பிலுள்ள பல்வேறு நலன்புரி நிலயங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மஞ்சன்தொடுவாய் அகதி முகாமில் வசிக்கும் இராசையா பத்மநாதன் தனது சொந்த ஊரான சம்பூர் குறித்தும் தற்போதைய அகதி முகாம் வாழ்க்கை குறித்தும் எம்மோடு பகிர்ந்துகொண்ட கருத்துக்களின் தொகுப்பு

### சம்பூர் பெயர் வரக் காரணம்

சகலதும் நிறைந்தது என்பதால் இந்த ஊரை சம்பூர் என்று அனைவரும் அழைக்கின்றனர். இந்தியாவில் இருந்து அங்கு சென்ற புலவர் ஒருவரால் இந்த பெயர் சூட்டப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். சம்பூரில் பிறக்கின்ற குழந்தைகள் எந்தவிதமான குறைபாடுகளுடனும் பிறப்பதில்லை என்றும் அனைவரும் எல்லாம் நிறைந்த வாழ்வை வாழ்ந்து வந்தாகவும் கூறப்படுகின்றது.

### இன்றைய நிலை

எல்லாம் நிறைந்த ஊரை விட்டு ஒன்றும் இல்லாதவர்களாய் அந்த மக்கள் இன்று அகதி முகாம்களில் வாழ்கின்றனர். வேரோடி விழுதெறிந்து வாழ்ந்த ஊரை இழந்த சோகம் இன்னும் காயாமல் இருக்கின்றது அவர்கள் மனங்களில். தற்போது முகாம் வாழ்க்கையே கதி என்றாகிப் போன நிலையில் எதிர்காலம் குறித்த ஏக்கங்கள் அவர்கள் மனங்களில் பரவிக்கிடக்கின்றது.

அண்மையில் 25,000 ரூபா நிதி உதவியுடன் இந்த மக்களை வேறு இடங்களில் குடியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது நிறைவேறவில்லை.தாங்கள் ஒரு இலட்சம் தருவதாகவும் தம்மை தமது சொந்த மண்ணில் குடியேற்ற முடியுமா என்று தாங்கள் அதிகாரிகளை வினவியதாகவும் பத்மநாதன் எம்மிடம் கூறினார். இது தமது சொந்த மண் மீதான அவர்களின் ஏக்கத்தை புரியவைத்தது.

பத்மநாதன் சம்பூரில் வாழ்ந்த போது அவருக்கு சொந்தமாக 20 ஏக்கர் வயல் நிலமும் நான்கரை ஏக்கர் தென்னந்தோப்புகளும் இருந்துள்ளன இதனை விட 180 கால்நடைகளையும் அவர் சொந்தமாக கொண்டிருந்ததாக குறிப்பிட்டார். இப்போது இவை எவையும் இன்றி அடுத்த வேளை உணவிற்காகவும்



இராசையா பத்மநாதன்

மற்றவர்களை எதிர்பார்க்கும் அகதி வாழ்வே தமக்கு வாய்த்திருப்பதாக அவர் கூறும்போது வேதனைப்படத்தான் முடிந்தது எங்களால்.

### அகதிமுகாம் வாழ்கை

எல்லோருக்கும் எல்லாம் கொடுத்த மண்ணை விட்டு வந்த மக்கள் இன்று அளவுச் சாப்பாட்டிற்கே கையேந்தி நிற்கின்ற அவலம் தொடர்கின்றது. அரிசியும் கோதுமை மாவும் இவர்களுக்கு நிவாரணமாக கிடைக்க சோறும் பிட்டும் மட்டுமே இவர்களின் நிரந்தர உணவு பழக்கமாகிவிட்டுள்ளது. உண வோடு சேர்த்துண்ண பக்க கறிகள் எவை யும் இல்லாதமை உணவு மீதான வெறுப் பையும் சலிப்பையும் ஏற்படுத்தி வருவதாக அவர் கூறினார். தினமும் கூலிவேலைக்கு சென்று தமக்கான வருமானத்தை தேட முற் படும் போதும் துயரம் இவர்களை விட்டக லாமல் துரத்துகின்றது. 600 ரூபாவிற்கு ஏனையவர்களுக்கு கிடைக்கும் ஒரு நாள் கூலி இவர்கள் அகதிகள் என்பதால் 300 ரூபாவாக குறைக்கப்படுவதாகவும் அதனை இழக்க முடியாதென்பதால் அந்த குறைவான கூலியினையே தாங்கள் பெற்று வருவதாகவும் பத்மநாதன் தெரிவித்தார்.

### குழந்தைகளின் எதிர்காலம்

சிறிய ஊராக இருந்த போதிலும் மருத்து வர்கள், பொறியியலாளர்கள் என கல்வியில் சிகரம் தொட்ட மனிதர்களை கொண்ட ஊராக சம்பூர் திகழ்ந்திருக்கின்றது. ஆனால் இன்று ஊரிழந்து வாழும் தமது குழந்தைகளுக்கு உரிய கல்வி வசதிகள் இல்லாதிருப்பதாகவும் அவர்களின் எதிர்காலம் குறித்த அச்சம் தமது மக்கள் மத்தியில் பரவிக்கிடப்பதாகவும் கூறினார். மற்றையவர்களால் வழங்கப்படும் பாவித்த துணிமணிகள் தான் தற்போது இவர்களுக்கு மானம் காக்க கிடைக்கின்றன.

எல்லாம் இழந்த பின்னும் எஞ்சியிருக்கும் நம்பிக்கையோடு நகர்கின்றது இவர்களின் வாழ்கைப்படகு காலம் கரைசேர்க்கும் என்ற கனவோடு.



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 5.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அஹர் எப்.எம். ஊடாக ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.15 முதல் 7.15 மணி வரையும் எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத் தளத்திலும் கேட்கலாம்.

## சுவடுகள்

✱ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப் படையில் திரட்டப்பட்ட IASC 137ஆவது அறிக் கையின் படி இலங்கையில் 58,015குடும்பங்களைச் சேர்ந்த 220,233 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✱ வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் காங்கேசன்துறைக்கு கிழக்காக மற்றும் மேற்காக உள்ள சில பகுதிகளில் பொதுமக்களை ஆரம்பகட்டமாக குடியமர்த்தலாம் என எதிர்பார்க் கப்படுகிறது. முதற்கட்டமாக காங்கேசன்துறை வீதிக்கு மேற்காக உள்ள கொல்லன் கலட்டி, பன் னாலை பகுதிகளில் 250 முதல் 300 குடும்பங்கள் வரை மீளக்குடியமர்த்துவது தொடர்பில் செயலக அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

✱ புத்தளம் மாவட்டத்தில் நோர்வே அகதிகளுக் கான பேரவை NRC பெண்கள் மற்றும் சட்ட ஆலோ சனைகளையும் வழிகாட்டல் வழங்கியுள்ளது. அது போல் Space என்கின்ற அரசசார்பற்ற நிறுவனம் புத்தளம் நகர எல்லைக்குட்பட்ட பின்தங்கிய பாட சாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியிருக்கிறது. மற்றும் சேவ் த சில்ரன் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் வாழுகின்ற 350 பேருக்கு உலர் உணவு நிவாரண பொதிகளை வழங்கியிருக்கிறது. 6000ரூபா பெறுமதி வாய்ந்த இந்த உலர் உணவு பொதிகளை இவர்கள் மீள இங்கு குடியமர்ந்தமைக்காகவே வழங்கியதாக நிறுவனத்தின் பொறுப்பாளர் ஹசீம் தெரிவித்தார்.

✱ திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து கடந்த 2 வருடங்க ளுக்கும் மேலாகத் தங்கியிருந்த 4580 குடும்பங்க ளைச் சேர்ந்த 17254 பேர் அவர்களுடைய சொந்த பிரதேசங்களுக்கு சமீபத்தில் மீள்குடியேற்றம் செய் யப்பட்டுள்ளார்கள்.

## உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம் தொடர்பான உங்கள் மேலான எண்ணங்களையும் உங்கள் படைப்புகளையும் எமக்கு எழுதி அனுப்புங்கள். அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேசும் படம்



திருகோணமலை அநுராதபுரசந்தியில் உள்ள சந்தையில் வியாபாரம் செய்யும் குசுமாவதியையே படத்தில் காண்கிறீர்கள். USAID யினால் வழங்கப்பட்ட 600 லட் சம் இலங்கை ரூபா நிதியுதவியுடன் People in need னால் புதிதாக அமைக்கப்பட்ட சந்தைக் கட்டிடத்தில் தற்போது வியாபரம் செய்யும் அவர் நவீன அழகான கட்டிடத்தில் வியாபாரம் செய்கின்றமை தனக்கு மிகவும் சந்தோஷமாக இருப்பதாகக் கூறுகிறார்.

## மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

# பால் சேகரிப்பு நிலையம் திறந்து வைப்பு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு அனுசரணை வழங்கும் நோக்கில் பால் சேகரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 23ஆம் திகதி திருகோணமலை உப்புவெளி பிரதேசத்தில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

கனேடிய சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பின் (CIDA) நிதிப்பங்களிப்புடன் உலக கரிசனம் (World Concern) எனும் அரசசார்பற்ற நிறுவனம் இந்த பால் கேரிப்பு நிலையத்தை கட்டி முடித்துள்ளது

இந்த நிலையத்தின் மூலம் குச்சவெளி பிரதேச பால் உற்பத்தியாளர்கள் தமது பால் உற்பத்திகளை நேரடியாக உள்ளூர் சந்தைக்கு அனுப்பிவைக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

MILCO நிறுவனமானது இந்த பால் சேகரிப்பு நிலையத்தில் சேகரிக்கப்படும் பாலினை தினமும் மலையகத்தில் உள்ள பால் பதனிடும் தமது தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தில் 3000 லீற்றர் பாலை சேகரிக்கக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் இதனை 5000 லீற்றர் சேகரிப்பிற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்க முடியும் என்றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பிரதேச விவசாயிகள் ஒரு லீற்றர் பாலை 32 ரூபா முதல் 35 ரூபா வரை விற்பனை செய்ய முடியும் என்றும் இதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு அதிக நன்மை ஏற்படும் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

உலக கரிசனம் நிறுவனமானது ஏற்கனவே இது போன்ற பால் சேகரிப்பு நிலையம் ஒன்றை மட்டக்களப்பில் உள்ள வெல்லவெளி பிரதேசத்திலும் ஏற்படுத்தி அங்குள்ள விவசாயிகளுக்கு நன்மை யளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



திருகோணமலை உப்புவெளிப்பிரதேசத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள பாற்பண்ணை

இதேவேளை CIDA மற்றும் உலக கரிசனம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து மூன்று சிறிய அளவிலான பால் சேகரிப்பு நிலையங்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளன.

இந்த நிலையங்களில் சேகரிக்கப்படும் பால் பிராந்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் இதனால் அதிகளவு விவசாயிகள் நன்மையடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த செயல் திட்டத்தின் ஊடாக சுமார் 580 விவசாயிகளுக்கு உலக கரிசன நிறுவனம் ஆதரவளித்துள்ளது.

பால் உற்பத்திக்கு தேவையான பசு மாடுகளை கொள்வனவு செய்வதற்கான கடனுதவிகள் மற்றும் பால் உற்பத்தி தொடர்பான தொழில் நுட்ப பயிற்ச்சிகள் என்பனவற்றை இந்த நிறுவனம் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது.

இந்த செயல் திட்டத்தின் மூலம் விவசாயிகளின் வருமானம் இருமடங்காக அதிகரித்திருப்பதாக உலக கரிசனம் நிறுவனத்தின் தேசிய பணிப்பாளர் ஐயன் மக்இனன்ஸ் தெரிவித்துள்ளார்.

உலக கரிசனம் நிறுவனமானது கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த 1500 விவசாயிகளுடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் மேலும் ஆயிரக்கணக்கான மீள்குடியமர்த்தப்படும் விவசாயிகளுக்கு அனுசரணையளிக்க முடியும் என்றும் ஐயன் மக்இனன்ஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## சாளரம்

இன்று பல தேவைகளைப் பூர்த்தி செய்வதில் தகவல்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. தகவல்கள் இன்றி தேவைகளைப் பூர்த்தி செய்வது சிரமமாக மாறியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர் முகாம்களில் வாழ்கின்ற மக்கள் அவர்களுக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமானப்பணிகள் குறித்து அறிந்து



கொள்வதற்காக இன்டர் நியூஸ் அமைப்பு ஜூலை மாதம் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை வானொலிப்பெட்டிகளை வழங்கியது. இது எவ்வகையில் பயனுள்ளதாக இருக்கின்றது என்பது குறித்து மக்களிடம் கேட்ட போது அவர்கள் கூறிய பதில்கள் இவை.

* நாங்கள் இடம் பெயர்ந்து இங்கு வரும் போது வானொலிப்பெட்டியோ வேறு எந்த பொருட்களோ அங்கிருந்து கொண்டு வரவில்லை. தற்போது எங்களுக்கு வானொலிப் பெட்டி கிடைத்திருப்பதால் பல விஷயங்களை எங்களால் அறிந்து கொள்ள முடியும். வெளியில் நடக்கின்ற விட யங்களை நாங்கள் ஊர் மக்களிடம் சென்றுதான் இதுவரை கேட் டுக்கொண்டிருந்தோம். இனி எங்களுக்கு வீட்டிலேயே செய்திகளை கேட்டு அறியக்கூடியதாக இருக்கும்.

* வானொலியின் ஊடாக மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை கேட்கும்போது அவை இடம் பெயர்ந்திருக்கின்ற மக்களுடைய தேவைகள் மற்றும் கருத்துக்களை மையமாகக்கொண்டதாக இருக்கின்ற காரணத்தினால் மக்கள் தங்களது பிரச்சினைகளை அங்கு முன் வைக்கின்றபொழுது விடயங்கள் உரிய அதிகாரிகளை சென்றடைகின்றது. எனவே கீழ் மட்டத்திலிருப்பவர்களின் தேவைகளை அவர்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

* இரண்டு வருடங்களாக இடம் பெயர்ந்திருக்கின்ற மக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. தங்களுடைய சொந்தப் பிரதேசத்தில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்வது கட்டாயத் தேவையாக இருக்கின்றது. எனவே வானொலி என்பது மிகவும் அவசியமான ஒன்றாக நான் நினைக்கின்றேன்.

## வாழ்வின் வர்ணங்கள்



இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்கள் அவர்களது ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்வதற்கு பல்வேறு தொழில்களை செய்கின்றனர். சொந்த இடங்களில் மீன்பிடி, விவசாயம் என்பவற்றையே தொழிலாக செய்து கொண்டிருந்தபோதிலும்கூட தற்போது கூலித் தொழில்களைச் செய்து அவர்களது காலத்தைக் கொண்டு செல்கின்றனர். மட்டக்களப்பின் சிங்கள மகாவித்தியாலயத்தில் தற்போது வசித்துவரும் அண்டனி லெனாட் மின்சாரப் பொருட்களை பழுதுபார்த்து வருமானத்தை ஈட்டி அவரதும் குடும்பத்தினரதும் தேவைகளைப்பூர்த்தி செய்து வருகிறார். சிப்பிகளைக்கொண்டு பல உருவங்களைச் செய்விலும் திறமை கொண்ட இவர் எவ்வாறு அதனை செய்யலாம் என் பதை விளக்கிக்கூறினார்.

'கொக்கு உருவம் செய்வதென்றால் நத்தை ஓடு ஒன்றை எடுத்து பின்புறம் இரண்டு ஓட்டைகள் போட்டு கால் அமைக்க வேண்டும். அதே போல் கழுத்தில் ஓட்டை போட்டு கழுத்துப்பகுதியை கம்பியின் உதவியுடன் செய்ய வேண்டும். அதன் பின்னர் அவற்றை முழுவதுமாக ஒட்டி பலப்படுத்த வேண்டும். தலைக்குரிய சிப்பிகளை தெரிவு செய்து அதில் பொருத்தி உருவத்தைத் தயாரிக்க வேண்டும். சொண்டு செய்வதற்கு ஊரி மற்றும் நண்டினுடைய கால்களைப் பயன்படுத்தலாம்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவகற்றல் பொறிமுறைகளும் மாற்றம் காணும் அம்பாறையும்

மனிதர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே தமது அன்றாட வாழ்வை முன்நகர்த்தி




வருகின்றனர்.

மனிதர்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகளில் பெருமளவானவை மனிதர்களின் அக்கறையீனங்களின் பிரதிபலிப்புகளாகவே அமைந்து விடுவது மறுக்க முடியாத உண்மை.

அந்த வகையில் மனிதர்களது அன்றாட வாழ்வின் அங்கமாக இருக்கும் கழிவுகளை அகற்றுவது மிக முக்கிய கனம் பெறும் விடயமாக மாறிவருகின்றது.

மனிதர்களுக்கு ஏற்படும் பல்வேறு

**கழிவகற்றல் முகாமைத்துவமானது மக்கள் தமது கழிவுப் பொருட்களை எவ்வாறு அகற்றுகின்றார்கள் என்பதிலும் அவை எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன என்பதிலுமே தங்கியுள்ளது**

நோய்களுக்கு கழிவுப் பொருட்கள் முறையற்ற விதங்களில் கையாளப்படலே பிரதான காரணம் என மருத்துவ அறிக்கைகள் குறிப்பிட்டு நிற்கின்றன.

கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்பான முகாமைத்துவமானது அண்மை நாட்களில் முக்கியத்துவம் மிக்கதொன்றாக மாறியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயல் திட்ட சேவைகள் பிரிவினரால் அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் கழிவகற்றல் முகாமைத்தும் தொடர்பான செயல்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பிரதேச மக்கள் மத்தியில் கழிவுகளை முறையாக அகற்றாமையால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தோ கழிவுகள் அகற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தோ மிகக்குறைந்தளவு அறிவே காணப்பட்டதாக இந்த செயல்திட்டத்தில் ஈடுபபட்ட கரி மொரிஸ் ஐவின்சன் என்பவர் ஐ.ஆர்.ஐ.என் இணையத்தளத்திற்கு தெரிவித்துள்ளார்

இந்த செயல்திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடன் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் செயல் திட்ட சேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் முகமாக ஐரோப்பிய ஒன்றியம் அம்பாறை மாவட்டத்தின் சுகாதார மேம்பாட்டு பணிகளுக்காக 12.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியிருந்தது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் சுமார் 95 கிலோமீற்றர் நீளமான பிரதேசம் இந்த திட்டத்தின் கீழ் கழிவுப் பொருட்கள் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளதாக கரி மொரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த மூன்றாண்டு திட்டமானது அம்பாறை மாவட்டத்தை மூன்று வலயங்களாக பிரித்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

அம்பாறை,கல்முனை மற்றும் திருக்கோவில் ஆகிய மூன்று வலயங்களிலும் உள்ள 13 நிர்வாக அலகுகளில் இடம்பெற்று வரும் இத் திட்டத்திற்கு சுமார் 5.5 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

பொதுவாக கழிவுப் பொருட்களை சேகரித்தல் அவற்றை சுழற்சி முறையில் பயன்படுத்தல் அல்லது அவற்றை அழித்தல் ஆகிய படிமுறைகளில் ஏதாவது ஒன்றையே செயல்திட்டங்கள் பிரதானப்படுதுவதாகவும் எனினும் அம்பாறை மாவட்டத்தை பொறுத்தவரை ஆரம்பம் முதல் முடிவு வரை அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் கரி மொரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயல்திட்டத்தின் ஒரு அம்சமாக பொதுமக்களுக்கான கழிவகற்றல் முகாமைத்துவம் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் ஈடுபட்டுள்ள அருமைத்துறை சுபாகரன் இந்த திட்டம் குறித்து கருத்து வெளியிடும் போது பொதுமக்களின் அதிகரித்த பங்களிப்பு இந்த திட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று கூறினார்.

கழிவகற்றல் முகாமைத்துவமானது மக்கள் தமது கழிவுப் பொருட்களை எவ்வாறு அகற்றுகின்றார்கள் என்பதிலும் அவை எவ்வாறு சேகரிக்கப்படுகின்றன என்பதிலுமே தங்கியுள்ளதாகவும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிகள் மூலம் அவர்கள் இது குறித்து தெளிவான



அறிவினை பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட மக்கள் மத்தியில் இது குறித்து கூடுதல் விழிப்புணர்வுகள் ஏற்பட்டுள்ளதாகவும் கழிவு சேகரிக்கும் கொள்கலன்கள் நிறைந்திருந்தால் தமது கழிவுகளை வேறெங்காவது வீசி விட்டுச் சென்ற மக்கள் தற்போது கழிவுகளை சேகரிக்கும் வாகனம் வரும் வரை அவற்றை வெளியிடங்களில் வீசாது வைத்திருந்து வாகனத்தில் போடுவதாகவும் சுபாகரன் தெரிவித்தார்.

இது அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றகரமான மாற்றம் என்றும் இந்த நிலை அனைத்து பகுதிகளிலும் பரவுவதன் மூலம் பெருமளவான நோய்களில் இருந்து பொது மக்கள் தம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை கழிவுகளை புதைப்பதற்கான மூன்று நிலப்பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 12 சுழற்சி முறை கழிவகற்றல் செயல்திட்டங்கள்

**செயல்திட்டங்கள் வெற்றியளிப்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளதால் பொதுமக்கள் தமக்கான சூழலை பாதுகாப்பானதாக மாற்றியமைப்பதில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியம்**

ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது இதுவே முதல் தடவை என்றும் இது போல் ஏனைய மாவட்டங்களிலும் இந்த திட்டத்தை விரிவாக்க ஐக்கிய நாடுகளின் செயல்திட்ட சேவைகள் பிரிவு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கரி மொரிஸ் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான செயல்திட்டங்கள் வெற்றியளிப்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளதால் பொதுமக்கள் தமக்கான சூழலை பாதுகாப்பானதாக மாற்றியமைப்பதில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியம் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் மீள்நிர்மாண நடவடிக்கைகள்

வவுனியாவில் நீண்ட காலமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும் பூந்தோட்டம் நலன்புரி முகாமில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. இந்த நிலமையை சீர் செய்வதற்காக அரச அதிகாரிகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் பல உடனடி முயற்சிகளை மேற்கொண்டன. வவுனியாவில் உள்ள பல உள்ளூர் அமைப்புகளின் ஒன்றியத்தின் தலைவரும் SEED நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியுமான சிங்கத்தை மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்காக நேர்கண்டுள்ளோம்.

***வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கு அரசு மற்றும் அரசசார்பற்ற ஸ்தாபனங்களால் ஆற்றப்பட்ட சேவைகள் எவை?***

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி சமைத்த உணவு உடை மற்றும் தற்காலிக தங்குமிடம் என்பவற்றை செய்து கொடுத்துள்ளோம். அதையடுத்து அவர்களுக்கான மருத்துவ வசதிகள், பால்மா பொருட்கள், பெண்களின் சுகாதாரத் தேவைகளுக்கான பொருட்கள், என்பனவும் உடனடியாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த விடயங்களை மேற்கொள்வதற்காக தினமும் காலையிலும் மாலையிலும் குழு சந்திப்பை மேற்கொள்வதோடு பாதிக்கப்பட்ட மக்களுடைய பொதுக்கலந்துரையாடல்களும் அரசசார்பற்ற நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களும் தேவைகளுக்கேற்ப ஒவ்வொரு நாளும் நடத்தி வருகின்றோம்.

***பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நிரந்தர வதிவிடங்களை ஏற்படுத்தித்தருமாறு வேண்டுகோள் விடுத்திருப்பதாக அறிகிறோம். அது தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?***

இந்த நடவடிக்கைகளிலே ஈடுபட்டுள்ள குழுவிற்கு இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது என்பது உண்மை. பாதிக்கப்பட்டவர்களின் யதார்த்தமான கோரிக்கையாகவே நாங்கள் இதைக் கருதுகிறோம். ஏனெனில் பல வருடங்களாக நலன்புரி நிலையங்களிலே வாழ்பவர்கள் சுயமாக வாழ்வதற்கான எத்தனிப்பை ஊக்குவிக்க வேண்டும். அதோடு அது அவர்களுடைய அடிப்படை உரிமையாகும். ஆனால் தற்போது எங்களிடம் இருக்கின்ற வளங்கள், முக்கியமாக நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற மக்கள் வேறு இடங்களில் குடியேற்றப்படக்கூடாது என்கின்ற ஓர் அரசின் நிலைப்பாடு, அதே போன்று



வளங்கள் அனைத்தும் தற்போது மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இந்தக் கோரிக்கைகளை அந்த மக்களுடன் இணைந்து பரிசீலித்தோம். அதனடிப்படையில் வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திற்குள்ளே இருக்கக்கூடிய இட வசதிகளைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட மக்களுக்கான தனிப்பட்ட குடிசைகளை அமைப்பது எனவும் குறிப்பிட்ட மக்கள் ஏற்கனவே இருந்த நலன்புரி நிலைய செயற்பாடுகளுக்கு அமைவாக இருக்கின்ற வாழ்விடங்களில் வாழவேண்டிய தேவையும் தவிர்க்கமுடியாமல் ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒரு பொது இணக்கப்பாடு காணப்பட்டு தற்போது ஏற்கனவே இருக்கின்ற தங்குமிட வசதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 70 குடும்பங்கள் குடியேறத் தயாராக இருக்கின்றன அதோடு தற்காலிக குடிசைகளும் அமைக்கப்படவுள்ளன.

***திருத்தியமைக்கப்பட்ட குடிசைகளுக்கும் ஏற்கனவே இருந்த குடிசைகளுக்கும் இடையே அமைப்பு ரீதியிலே வேறுபாடு இருக்கின்றதா?***

முற்றிலும் எரிந்த கட்டிடங்கள் திருத்தியமைக்கப்படுவதில்லை. அவை முற்றிலும் அழிக்கப்பட்டு அவ்விடங்களில் தனிப்பட்ட குடிசைகள் அமைக்கப்படவிருக்கின்றன. எரியாமல் பாவனையற்று ஏற்கனவே நலன்புரி நிலையத்தில் இருக்கின்ற வாழ்விடங்களே சிறு சிறு திருத்தங்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அங்கு மக்களை வாழும்படி கேட்டிருக்கின்றோம். ஏற்கனவே பல வாழ்விடங்கள் நலன்புரி நிலையத்தில் வெறுமையாக இருப்பதால் அவற்றை உடனடியாக திருத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றோம். அவை பழைய வதிவிடங்களைவிட எவ்விதத்திலும் வித்தியாசமானவை அல்ல.

***இத்தகைய அனர்த்தம் எதிர்காலத்தில் ஏற்படாத வண்ணம் தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைக்ளை முன்னெடுத்துள்ளீர்கள்?***

எதிர்வரும் காலங்களில் பல விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள், தீயை எப்படி தவிர்த்துக் கொள்வது, தீ விபத்து ஏற்படும்போது எவ்வாறு அழிவுகளையும் இழப்புக்களையும் தவிர்த்துக்கொள்ளலாம் என்பது போன்ற பயிற்சி வகுப்புகளையும் நாங்கள் நடத்த இருக்கின்றோம். அதே போன்று அரச நிர்வாகத்தினரும் மின்சார ஒழுக்கு போன்ற விடயங்களைப் பார்ப்பதாக உறுதியளித்துள்ளார்கள். ஆனால் இவை எல்லோருடைய கூட்டு முயற்சியினூடாகவே திறப்பட செயற்பட முடியும்.

# உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியி லும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ் வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின் றோம். வடக்கு கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்க ளால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு சேமிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும் வகையில் 'சேமிப்பு' குறு நாடகம் அமைந்தது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

## சேமிப்பு



மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய விடயங்களை மையப்படுத்தி உங்கள் கதைகள் என்ற குறு நாடகப் பகுதி ஒலிபரப்பாகி வருகின்றமை நீங்கள் அறிந்த விடயமே. கடந்த நிகழ்ச்சிகள் மூலம் மக்களுக்கு தேவையான முக்கியமான பல விடயங்களை நாடக வடிவில் ஒலிபரப்பினோம்.

சேமிப்புப் பழக்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமானதாகும். சேமிப்பு பழக்கத்தை சிறுவர்கள் மத்தியிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக பாடசாலை மட்டத்திலிருந்தே சேமிப்பின் முக்கியத்துவம் பற்றி அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. அதே போல் நாடளாவிய ரீதியில் வங்கிகள் பல சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. சமூகத்தில் எல்லா மட்டங்களில் உள்ளவர்களும் சேமிப்பை மேற்கொள்ளலாம். எமது பணத்திற்கு இலவசமாக பாதுகாப்பு கிடைப்பதுடன் வட்டி என்ற பெயரில் இலவசமாக சிறு தொகைப்பணம் எமது சேமிப்பில் இணைத்துக் கொள்ளப்படுகிறது. எமக்கு அவசர தேவைகள் ஏற்படும் போது அந்தப் பணம் உதவியாக இருக்கும்.

இந்த குறு நாடகத்தில் வறுமை நிலையில் உள்ள ஒரு குடும்பத்தில் உள்ள ராஜன் தனது நண்பர்களைப் பார்த்து தானும் சேமிக்க வேண்டும் என்ற முடிவிற்கு வருகிறான். ஆனால் ராஜனின் சம்பளம் மாத முடிவில் வீட்டுச் செலவிற்கே போதுமானதாக இருக்காது. இந்த நிலையில் எப்படி சேமிப்பது என்று தாயார் கேட்கிறார். ஆனாலும் தனது மகனின் எதிர்காலத் தேவைகளுக்கு என்று எதுவுமே இல்லாமல் போய் விடும் எனபதை உணர்ந்து கொள்கிறார். முடிந்த அளவிற்கு வீட்டு செலவுகளை குறைத்து சிறிய தொகைப் பணத்தையாவது சேமிக்கலாம் என்று ராஜனின் தாயார் கூறுகிறார். இந்த விடயத்தை கேள்விப்பட்ட ராஜனின் மாமனார் கூட ராஜனின் கருத்தை வரவேற்கிறார்.

நடுத்தரக் குடும்பங்கள் ஓரளவுக்கு பரவாயில்லை என்றாலும் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்கள் என்று நோக்கும் போது அவர்களுக்கு சேமிப்பு என்பது நினைத்துப் பார்க்க முடியாத விடயமாக இருக்கும். ஆனால் அவர்களுக்குத்தான் சேமிப்பு அவசியமாகிறது. அன்றாட கூலித்தொழிலுக்கு செல்பவர்களுக்கு சாப்பாட்டுக்கே கஷ்டமாக இருக்கும். ஆனாலும் அவர்கள் தமக்கு முடியுமான நேரங்களில் கொஞ்சம் கொஞ்சமாக சேமித்தாலும் போதுமானதாக இருக்கும். அவர்களது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அந்தப் பணம் நிச்சயமாக உதவும்.

ஆகவே எமது நிலமைகளுக்கேற்ப ஒரு வங்கியை தெரிவு செய்து ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பித்து சிறிய தொகைப் பணத்தையாவது சேமிக்க வேண்டும் என்பதை உங்கள் கடமைகளில் ஒன்றாக நினைத்து செயற்பட்டீர்கள் என்றால், அவசரத்தேவைகளின் போது உங்கள் நண்பனைப் போல அந்தப் பணம் உங்களுக்கு உதவும்.

அந்த விடயத்தை வலியுறுத்தும் வகையிலேயே சேமிப்பு என்ற குறு நாடகம் ஒலிபரப்பானது.

மீண்டும் வாழ்வோம் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID
FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிடெட்டாரால் கொழும்பு 14, கிராண்ட்பாஸ் வீதி 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org